பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 08 2026 7 15

வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாட்டு ஒழுங்குமுறை திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.
- கேரள மாநிலத்தின் பெயரை கேரளம் என்று பெயர் மாற்றுவதற்கான மசோதா நாடாளுமன்றதில் நிறைவேறியது.
- கடற்படைத் தலைமைத் தளபதி அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன், மொரீஷியஸ் பிரதமரை சந்தித்து இரு நாடுகளுக்கு இடையேயான கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தார்.
- பாகிஸ்தான் விமானப்படை, பலுசிஸ்தான் சூரப் மாவட்டத்தில் நேற்று நடத்திய தாக்குதலில் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
- Hamburg சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஸ்பெனின் Vega Hernandez இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாட்டு ஒழுங்குமுறை திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி இச்சட்டத்திருத்த மசோதாவை முன்மொழிந்தார்.

நாட்டின் சுரங்கத் துறையை மேலும் பயனுள்ளதாகவும், முதலீட்டுக்கு உகந்ததாகவும் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றுவதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

கேரள மாநிலத்தின் பெயரை கேரளம் என்று பெயர் மாற்றுவதற்கான மசோதா நாடாளுமன்றதில் நிறைவேறியது.

முன்னதாக மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட இம்மசோதாவிற்கு மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இம்மசோதா மூலம் அரசியல் சாசனத்தின் முதலாவது பட்டியலில் கேரளா என்ற பெயருக்கு மாற்றாக கேரளம் என்று பெயர் மாற்றம் செய்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இம்மசோதா குறித்த விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த் ராய், கேரளா என்ற பெயரை கேரளம் என்று மாற்றுவதற்கு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்து கேரள சட்டப்பேரவையில் 2024ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்தார்.

மலையாளத்தில் அம்மாநிலத்தின் பெயர் கேரளம் என்றும், ஆனால் அரசியல் சாசனத்தில் கேரளா என்று இடம்பெற்றுள்ளதால் இந்தப் பெயர் மாற்றம் குறித்து கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக திரு. நித்யானந்த் ராய் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இதுவரை ஆயிரத்து 900 கிலோ மீட்டர் தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக கூறினார்.

தற்போது மாநிலம் முழுவதும் 961 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலைப் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்திற்கு கடந்த 5 ஆண்டுகளில் நெடுஞ்சாலைப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் சென்னை - பெங்களூரு விரைவுச் சாலை, சென்னை துறைமுகம் - மதுரவாயல் உயர்மட்டச் சாலை உள்ளிட்ட பணிகள் விரைவாக நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

தருமபுரி - சேலம் இடையே தொப்பூர் கணவாய் பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள் 45 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய கல்வி உதவித் திட்டத்தை நடப்பு கல்வியாண்டு முதல் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பது குறித்து மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, கல்வித்துறை உயர் அதிகாரிகளுடன் விவாதித்தார்.

நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாவதிக்கப்பட்டது.

<<<<>>>>

தமிழகத்தில் பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு துர்காதாஸ் உய்கே இதனைத் தெரிவித்தார்.

மாநில அரசுடன் இணைந்து பழங்குடியினரின் குடியிருப்புப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பழங்குடியினர் மேம்பாட்டு மையங்கள் மூலம் தமிழகத்தில் பழங்குடியினர் சுய உதவிக் குழுவுக்கு தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன்களும், திறன்மேம்பாட்டுப் பயிற்சிகளும் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உயர்கல்விக்கான உதவித் தொகைகள், ஆராய்ச்சிக்கான ஊக்கத் தொகைகள் போன்றவையும், பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படுவதாக திரு. துர்காதாஸ் உய்கே கூறினார்.

<<<<>>>>

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன், போர்ட்லூயிசில் மொரீஷியஸ் பிரதமர் திரு. நவீன்சந்திர ராம்கூலத்தை சந்தித்துப் பேசினார்.

அப்போது இருதரப்பு கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தார்.

இரு நாட்டு கடற்படை இடையே பயிற்சி பரிமாற்றங்கள், தகவல் பரிமாற்றங்கள், திறன் மேம்பாட்டு முயற்சிகள் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டதாக சமூக வலைதளத்தில் கடற்படை தெரிவித்துள்ளது.

மொரீஷியஸ் காவல்துறை மற்றும் கடலோர காவல்படைக்கு இந்திய கடற்படையின் சார்பில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என்று அட்மிரல் சுவாமிநாதன் மொரீஷியஸ் பிரதமரிடம் உறுதியளித்ததாகவும் கடற்படை வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சுதந்திர தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக கடற்படை மற்றும் விமானப்படையின் இசை நிகழ்ச்சி கேரளாவில் இன்று நடைபெறுகிறது.

திருவனந்தபுரம், கண்ணூர், கொச்சி ஆகிய இடங்களில் இந்த நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இசை மூலம் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இது நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த இசை நிகழ்ச்சிகள் இன்று மாலை 6 மணிக்குத் தொடங்கும் என்று அவர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சிபிஎஸ்இ 12ஆம் வகுப்பு துணைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேர்வு முடிவுகளை மாணவர்கள் www.results.digilocker.gov.in என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஹரியானாவில் மாநில அளவிலான ஹெச்.ஐ.வி. தொற்று விழிப்புணர்வு பிரச்சாரத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி பஞ்ச்குலாவில் தொடங்கி வைத்தார்.

இப்பிரச்சாரம் அக்டோபர் 12ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

நாட்டின் பாதுகாப்பான 15 மாவட்டங்கள் பட்டியலில் ஹரியானாவின் குருஷேத்ரா மற்றும் கைத்தல் மாவட்டங்கள் இடம்பெற்றுள்ளதற்கு பாராட்டு தெரிவித்தார்.

ஹெச்.ஐ.வி. தொற்றுக்கு எதிரான நடவடிக்கையை உரிய விழிப்புணர்வு, சரியான தகவல் ஆகியவற்றின் மூலம் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்று ஹரியானா முலமைச்சர் கூறினார்.

<<<<>>>>

ரயில் ஒன் செயலியில் நாள்தோறும் சராசரியாக 10 லட்சம் பயணச்சீட்டுகள் பதிவு செய்யப்படுகிறது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், கடந்த ஆண்டு ஜுலை மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட ரயில் ஒன் செயலிலில் 4 கோடியே 76 லட்சத்துக்கும் அதிகமான பதிவிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

பாகிஸ்தான் விமானப்படை, பலுசிஸ்தான் சூரப் மாவட்டத்தில் நேற்று நடத்திய தாக்குதலில் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதுகுறித்து பலுசிஸ்தான் குடியரசு குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தான் ராணுவமும், விமானப் படையும் இணைந்து சூரப் மாவட்டத்தின் Gudar மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் குண்டு வீசியதாகவும், துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் கூறியுள்ளது.

இதனால் உயிரிழப்புகளும், பொதுமக்களின் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவம் குற்றம் சாட்டியுள்ளது.

நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மக்களும், அதிகாரிகளும் தடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து பலுசிஸ்தான் மக்களின் உயிர்களையும், அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று பலுசிஸ்தான் குடியரசு குழு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

வங்கக் கடலின் வடக்குப் பகுதியில் குறைந்த காற்றழுத்த பகுதி உருவாகக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஒடிசா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

கர்நாடகா, கிழக்கு உத்தரப்பிரதேசம், குஜராத், கேரளம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களிலும் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

Hamburg சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஸ்பெனின் Vega Hernandez இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தை சுற்றில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் பொலியாவின் Arias - Zeballys இணையை வென்றது.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

திண்டுக்கல்லில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த சேலம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 182 ரன் எடுத்தது.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிங்கிய சேப்பாக் அணி, 16 புள்ளி 4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 186 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் கோவை - நெல்லை அணியையும், திருப்பூர் - திருச்சி அணியையும் எதிர்கொள்கின்றன.

------------

உலக அலைச்சறுக்குப் போட்டி தமிழகத்தின் மாமல்லபுரத்தில் நேற்று தொடங்கியது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த 100 அலைச்சறுக்கு வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தியாவின் சார்பில் தமிழகத்தைச் சேர்ந்த 8 பேர் உட்பட 12 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>